கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி – III
– 2009/2010 (நவெம்பர்/டிசம்பர் - 2010)

LIBRARY
JUN 2011
Eastern University, Sri Lanka.

# EDUS 4101 கல்வியில் ஆய்வு முறைகள்
# (Research Methods in Education)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. (அ) ஓர் ஆய்வின் வடிவமைப்பைத் தீர்மானிக்கும் விடயங்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) ஆய்வுப் பிரச்சினை ஒன்றை இனம்காணும்போது ஆய்வாளன் எவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பிடுக?
(08 புள்ளிகள்)

(இ) ஓர் ஆய்வின் முடிவு சிறந்ததென ஏற்றுக்கொள்ள வேண்டுமாயின் அது கொண்டிருக்க வேண்டிய நிபந்தனைகளை எடுத்துரைக்க?
(07 புள்ளிகள்)

02. (அ) ஓர் ஆய்வுக்குக் கருதுகோள் எந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறிப்பிட்டு கருதுகோள் ஒன்று கொண்டிருக்க வேண்டிய முக்கிய இயல்புகளை எடுத்துக்காட்டுக.
(08 புள்ளிகள்)

(ஆ) ஆய்வு முன்மொழிவானது எவ்வாறான மாதிரி அமைப்பினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்க?
(07 புள்ளிகள்)

(இ) ஆய்வு முன்மொழிவில் உள்ளடங்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக?
(10 புள்ளிகள்)

03. (அ) நிகழ்வின் பின் ஆய்வின் படிநிலைகளைக் குறிப்பிட்டு அதன் சாதக, பாதக விடயங்களைச் சுருக்கமாக ஆராய்க?
(10 புள்ளிகள்)

(ஆ) "எந்த ஓர் ஆய்வுக்கும் ஆய்வு ஒழுங்கு முறை மிகவும் அவசியமானது" இதற்குப் பொருத்தமான உதாரணங்கள் காட்டி விளக்குக?
(09 புள்ளிகள்)

(இ) ஆய்வுக்குத் தேவையான தரவுகளைச் சேகரிப்பதற்கு ஆய்வாளன் எவ்வாறான உபாயங்களைக் கையாள வேண்டும் என்பதை எடுத்துரைக்க?
(09 புள்ளிகள்)

04. (அ) பரிசோதனை, செயல்நிலை ஆய்வுகளை ஒப்பிட்டு ஆராய்க?

(09 புள்ளிகள்)

(ஆ) "ஆய்வொழுக்கப்பண்பு" என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது என்பதைச் சுருக்கமாக எடுத்துரைக்க?

(07 புள்ளிகள)

(இ) தரவுப் பகுப்பாய்வை மேற்கொள்ளும்போது நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்களை விமர்சன ரீதியாக ஆராய்க.

(09 புள்ளிகள்)

05. (அ) மாதிரி தெரிவு செய்யும்போது ஆள்வாளன் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்களைச் சுருக்கமாக எடுத்துரைக்க?

(09 புள்ளிகள்)

(ஆ) புள்ளி விபரவியல் ஆய்வுகளுக்கு வகுப்பாக்கம் (Classification) ஏன் அவசியமானது என்பதை எடுத்துக்காட்டுக?

(08 புள்ளிகள்)

(இ) தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும்போது வரிப்படங்கள் எந்தளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதைச் சுருக்கமாக விளக்குக?

(08 புள்ளிகள்)

06. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 04 கல்வி வலயங்களில் பட்டிருப்பு வலயமும் ஒன்றாகும். பட்டிப்பளை, தென்னெருவில் பற்று, போரதீவுப் பற்று ஆகிய 03 பிரதேசப் பிரிவுகளை உள்ளடக்கிய இவ்வலயம் 1983ம் ஆண்டு தொடக்கம் யுத்ததினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த யுத்த சூழ்நிலை மக்களுக்கு பாரியளவான இன்னல்களைக் கொடுத்ததுடன் பல பாதிப்புக்களையும் ஏற்படுத்தியது. இதனால் அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தங்களது அடிப்படை வசதிகளை இழந்து வேறு பிரதேசங்களை நோக்கி இடம் பெயர்ந்ததுடன் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளார்கள். இவ்வாறான யுத்த பாதிப்புக்கள் இன்று வரை இப்பிரதேசங்களில் தாக்கம் செலுத்துகின்றன. யுத்த அனர்த்தம் காரணமாக பாடசாலைகள் இயங்கா நிலையில் இருந்தமையும், மாணவர்கள் வேறு பிரதேசப் பாடசாலைகளை நோக்கி இடம்பெயர்ந்தமையும், இதனால் இப்பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் தரம் வீழ்ச்சியடைந்தமையும் முக்கிய விடயங்களாகும்.

இவ்வாறான சூழ்நிலை காரணமாக இப்பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றார்கள். மாணவர்கள், ஆசிரியர்கள், சூழல் போன்ற காரணிகள் இப்பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளை வீழ்ச்சி நிலைக்கு கொண்டு செல்வதற்கு காரணமாக அமைகின்றன. அதனால் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளுடன் போட்டி போட்டுக்கொண்டு இப்பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளை அபிவிருத்தி நோக்கிக்

கொண்டு செல்வதிலும், மாணவர்களின் கற்றல் ஆர்வம், அடைவுகள் என்பவற்றை அதிகரிப்பதிலும் அதிபர்கள் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றார்கள்.

LIBRARY
Eastern University, Sri Lanka.

(அ) இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றை மையமாகக் கொண்டு 05 ஆய்வுத் தலைப்புகளை வடிவமைக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) நீர் பிரச்சினைகளை இனம் கண்டு வடிவமைத்த ஒவ்வொரு ஆய்வுத் தலைப்புகளுக்கும் ஐவ்வைந்து நோக்கங்கள் எழுதுக?

(15 புள்ளிகள்)

*********